இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 3093/2020

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 23478/2019-லிருந்து எழுகிறது)

நியூ இந்தியா அஷ்ரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

திருமதி. சோம்வதி மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் 3094/2020

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 4801/2020-லிருந்து எழுகிறது)

நியூ இந்தியா அஷ்ரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

திருமதி சங்கீதா மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் 3095/2020

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 4643/2020-லிருந்து எழுகிறது)

நியூ இந்தியா அஷ்ரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

அஸ்மதி உறட்டூன் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

<u>உரிமையியல் மேல்முறையீடு எண் 3096/2020</u>

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 5441/2020-லிருந்து எழுகிறது)

சோழமண்டலம் தி/ள். ஜெனரல்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

உமாராணி மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

<u>உரிமையியல் மேல்முறையீடு எண் 3097/2020</u>

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6381/2020-லிருந்து எழுகிறது)

நியூ இந்தியா அஷூரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

திருமதி பிங்கி மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

<u>உரிமையியல் மேல்முறையீடு எண் 3098/2020</u>

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 7556/2020-லிருந்து எழுகிறது)

நியூ இந்தியா அஷூரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

நானக் சந்த் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

<u>உரிமையியல் மேல்முறையீடு எண் 3099/2020</u>

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 8250/2020-லிருந்து எழுகிறது)

ஓரியண்டல் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிடெட் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

திருமதி ரிங்கு தேவி மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்:

அனுமதி வழங்கப்பட்டது.

2. பொதுவான சட்டப்பிரச்சினைகளை எழுப்புகின்ற இந்த மேல்முறையீடுகள் ஒன்றாகக் கேட்டறியப்பட்டபின், இந்தப் பொது தீர்ப்புரையினால் தீர்வு காணப்படுகின்றன. இந்த மேல்முறையீடுகளைத் தீர்மானிப்பதற்காக, **உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 23478/2019-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- சோம்வதி மற்றும் பலர்** என்ற வழக்கிலுள்ள சங்கதிகளை விரிவாகவும், மற்ற மேல்முறையீடுகளிலுள்ள சங்கதிகளை சுருக்கமாகவும் குறிப்படுவது போதுமானதாகும்.

3. கோருரிமையாளர்களுக்கு ஆதரவாக இரண்டு பிரிவின்கீழ் அ∴தாவது, "நல்லுறவு இழப்பிற்கும்" மேலும் "அன்பு மற்றும் பாசம்" இழப்பிற்கும் வழங்கப்பட்ட இழப்பீடு தொடர்பாக மோட்டார் வாகன விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயத்தால் (மோ.வி.கோ.தீ.) தீர்வளிக்கப்பட்டதிலிருந்து எழுந்த உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை எதிர்த்து இம்மேல்முறையீடுகள் அனைத்தும் மூன்று காப்பீட்டு நிறுமங்களால் அ∴தாவது, நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், சோழமண்டலம் தி/ள். ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியவற்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 23478/2019-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- திருமதி சோம்வதி மற்றும் பலர்

4. திருமதி சோம்வதியின் கணவரான இராம் ஜியாவன், 6.12.2001 அன்று நடந்த மோட்டார் வாகன விபத்தில் தனது மனைவியான திருமதி சோம்வதியை கைம்பெண்ணாகவும், ஏழு இளவர் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்துவிட்டார். மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988, பிரிவு 166-இன் கீழ் ரூ.15,25,000/- இழப்பீடு கோரி கோருரிமை மனு எண் 7/2002 தாக்கல் செய்யப்பட்டது. மோ.வி.கோ.தீ. 22.3.2003-ஆம் தேதியிடப்பட்ட தீர்வளிப்பின் மூலம் கோருரிமைத் தொகையான ரூ.1,67,000/-ஐ 9% வட்டியுடன் அனுமதித்தது. ஆணையிலிருந்து எழும் முதல் மேல்முறையீடு (ஆ.எ.மு.மே.) எண் 1894/2003 என்ற ஒரு மேல்முறையீடு உயர் நீதிமன்றத்தில் திருமதி சோம்வாதி தேவியாலும், மற்றவர்களாலும் தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம், கோருரிமையாளர்களின் மேல்முறையீட்டை அனுமதித்து, ரூ.12,54,000/-ஐ இழப்பீடு வழங்கியது. 25.2.2019-ஆம் தேதியிடப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு எதிராக இந்த மேல்முறையீடு காப்பீட்டு நிறுமத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டில் இரண்டு தலைப்புகள் அ.ாவது வகை எண் (vi) மற்றும் (viii)-இன் கீழ் வழங்கப்பட்ட இழப்பீடு எதிர்த்துரைக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:-

> "(vi) அன்பு மற்றும் பாசம் இழப்பு = ரூ.4,00,000/- (எட்டு கோருரிமையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/-)
>
> (viii) 2 முதல் 8 வரையிலான மேல்முறையீட்டாளர்கள்/ கோருரிமையாளர்களுக்கு பெற்றோர்சார்ந்த நல்லுறவு இழப்பு = ரூ.2,80,000/- (கோருரிமையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.40,000/-)."

5. இந்நீதிமன்றம் 24.4.2019 அன்று அறிவிப்பு அனுப்புகையில் பிறப்பித்த ஆணை பின்வருமாறு:-

"ஆணை

காலதாமதம் மன்னிக்கப்பட்டது.

இவ்வழக்கில் நல்லுறவு இழப்பு, அன்பு மற்றும் பாசம் இழப்பு என்ற இவ்விரண்டுக்கும் உயர் நீதிமன்றத்தால் தீர்வளிக்கப்படலாமா? என்பதற்குட்பட்டு எழுவினாவுக்கு நான்கு வாரத்திற்குள் திரும்பத்தக்க அறிவிப்பு அனுப்புக.

கூடுதலாக, நேரடியாக ஒப்படைப்பு சேவையும் அனுமதிக்கப்படுகிறது.

மறு உத்தரவுகள் வரும்வரை, பின்வருமாறு உள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் கூறு (vi)-இன்படி, கோருரிமையாளர்களுக்கு செலுத்தக்கூடிய 2 இழப்பீட்டுத் தொகைச் செலுத்தங்கள் நிறுத்திவைக்கப்பட்டு, தெரிவிக்கப்படுவதாவது:

"அன்பு மற்றும் பாசம் இழப்பு = ரூ.4,00,000/- (எட்டு கோருரிமையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/-)"

6. இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆஜராகி, பதிலுரையையும் எழுத்துமூல பணிந்துரைகளையும் தாக்கல் செய்துள்ளனர்.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 4801/2020-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- சங்கீதா தேவி மற்றும் பலர்

7. எதிர்மேல்முறையீட்டாளர் சங்கீதா தேவியின் கணவரான சஞ்ஜய் குமார் 12.1.2015 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்துபோனார். மோ.வி.கோ.ம. எண் 862/2016 என்ற கோருரிமை மனு எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மோட்டார் வாகன விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயத்தால் 9% வட்டிச் சேர்த்து ரூ.17,71,000/- இழப்பீடு வழங்கி, அக்கோருரிமை மனு அனுமதிக்கப்பட்டது. கோருரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் ஒரு மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம், **மேக்மா ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- நானு ராம் (எ) சுஉற்ரு ராம் மற்றும் பலர்** *(2018) 18* **எஸ்.சி.சி.** *130* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பின்பற்றி, 'அன்பு மற்றும் பாசம்' இழப்புக்கு ரூ.50,000/- என்ற வீதத்தில் ஒவ்வொரு எட்டு கோருரிமையாளர்களுக்கும், அதேபோன்று, 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ் அனைத்து எட்டு கோருரிமையாளர்களுக்கும் ரூ.40,000/- என்ற வீதத்தில் இழப்பீடு வழங்கியது. தில்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் மனக்குறையுற்று, காப்பீட்டு நிறுமம் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்துரைத்து மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளது.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 4643/2020-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- அஸ்மதி உறட்டூன் மற்றும் பலர்

8. முகமது உறாசிபுல் பாசன் என்பவர் 29.10.2007 அன்று மோட்டார் வாகன விபத்தில் காலமானார். கோருரிமை மனு எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல்

செய்யப்பட்டு, அதில் தொகை ரூ.17,32,776/-ஐ வட்டியுடன் இழப்பீடாக வழங்கி, மோட்டார் விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம், 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொரு ஏழு கோருரிமையாளர்களுக்கும் ரூ.50,000/- என்ற வீதத்திலும், 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொரு ஏழு கோருரிமையாளர்களுக்கும் ரூ.40,000/- என்ற வீதத்திலும் இழப்பீடு வழங்கியது. தில்லி உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்புரையால் மனக்குறையுற்று, காப்பீட்டு நிறுமம் மேல்முறையீட்டில் உள்ளது.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 5441/2020-லிருந்து எழுகிறது) சோழமண்டலம் தி/ள். ஜெனரல் இன்உூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- உமாராணி மற்றும் பலர்

9. இறந்துபோன கிருஷ்ணசாமிக்கு 7.9.2014 அன்று வாகன விபத்து நிகழ்ந்தபின் இறந்துபோனார். கோருரிமை மனு எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, அது, மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயத்தால் ரூ.13,60,000/- இழப்பீடு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. காப்பீடு நிறுமத்தால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின்கீழான தீர்வத்தொகை ரூபாய் ஒரு இலட்சமும், மற்றும் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழான தீர்வத்தொகை ரூபாய் மூன்று இலட்சமும் உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டது, இது இம்மேல்முறையீட்டில் காப்பீட்டு நிறுமத்தால் எதிர்த்துரைக்கப்பட்டுள்ளது.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 6381/2020-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்ரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- திருமதி பிங்கி மற்றும் பலர்

10. தினேஷ் குமார் என்பவர் 11.6.2014 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்துபோனார். கோருரிமை மனு எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயத்தால் தொகை ரூ.13,01,776/- இழப்பீடு வழங்கி அனுமதிக்கப்பட்டது. கோருரிமையாளர்கள், உயர் நீதிமன்றம் முன்பு மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்ததால், அது இழப்பீட்டை உயர்த்தியது. உயர் நீதிமன்றம், 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொரு நான்கு கோருரிமையாளர்களுக்கும் ரூ.50,000/- மற்றும் 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொரு கோருரிமையாளர்களுக்கும் ரூ.40,000/- என்ற வீதத்தில் இழப்பீடு வழங்கியது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் மனக்குறையுற்று, காப்பீட்டு நிறுமம் மேல்முறையீட்டில் உள்ளது.

உரிமையியல் மேல்முறையீடு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 7556/2020-லிருந்து எழுகிறது) நியூ இந்தியா அஷ்ரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- நானக் சந்த் மற்றும் பலர்

11. கௌரவ் என்பவர் 23.9.2010 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்துபோனார். கோருரிமை மனு இறந்துபோனவரின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டு, அதில் ரூ.4,83,348/- இழப்பீடு வழங்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. கோருரிமையாளர்கள் உயர் நீதமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது. உயர் நீதிமன்றம், 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் இவ்விருவருக்கும் தலா ரூ.50,000/-ம், 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ்

இவ்விருவருக்கும் தலா ரூ.40,000/-ம் இழப்பீடு வழங்கியது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் மனக்குறையுற்று, இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உரிமையியல் மேல்முறையீட்டு எண் ------/2020 (சி.அ.ம. (உ) எண் 8250/2020-லிருந்து எழுகிறது) ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- திருமதி ரிங்கு தேவி மற்றும் பலர்

12. பீர்பால் குமார் என்பவருக்கு 27.7.2008 அன்று விபத்து நிகழ்ந்ததன் விளைவாக அவர் இறந்துபோனார். ரூபாய் இருபது இலட்சம் கோரி எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட கோருரிமை மனுவில் ரூ.5,80,000/- இழப்பீடு வழங்கி மோட்டார் விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டது. காப்பீட்டு நிறுமம் மேல்முறையீடு ஒன்றினைத் தாக்கல் செய்தது. தீர்ப்பாயம், ரூ.40,000/- என்ற வீதத்தில் மகவுசார்ந்த நல்லுறவு இழப்புக்கான தொகையை ஒவ்வொரு கோருரிமையாளர்களுக்கும், அதாவது, மனைவி, இரண்டு குழந்தைகள் மற்றும் தந்தையார் ஆகியோருக்கு மொத்தமாக ரூ.1,60,000/-ஐ தீர்வளித்தது. காப்பீட்டு நிறுமத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் "அன்பு மற்றும் பாசம் இழப்பு" என்ற தலைப்பின் கீழ் உயர் நீதிமன்றம் நான்கு கோருரிமையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/- வீதத்தில் இழப்பீட்டை உயர்த்தியது. அதாவது, மொத்தத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம் உயர்த்தியது. காப்பீட்டு நிறுமம் உயர் நீதிமன்றத்தின் தீாப்புரையால் மனக்குறையுற்று இந்த மேல்முறையீட்டுடன் வந்துள்ளது.

13. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரையின் வாதங்களோடு கோருரிமையாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களையும் நாங்கள் கேட்டறிந்தோம்.

14. அனைத்து மேல்முறையீடுகளிலும் பரிசீலிக்கப்படவேண்டிய ஒரே பிரச்சினையானது, கோருரிமையாளருக்கு இரண்டு தலைப்புகளான (அ) நல்லுறவு இழப்பு மற்றும் (ஆ) அன்பு மற்றும் பாசம் இழப்பின் கீழ் வழங்கப்பட்ட இழப்பீடு குறித்தேயாகும். "நல்லுறவு" என்பதைப் பொறுத்தவரையில், மனைவி மட்டுமே 'நல்லுறவு' இழப்பு தொகைக்குரியவரா? அல்லது குழந்தைகளுக்கும், பெற்றோருக்குங்கூட நல்லுறவு இழப்புத் தொகை தீர்வளிக்கப்படலாமா? என்பதாகும்.

15. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டதாவது, இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு ஆயம், **நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- பிரணய் சேதி மற்றும் பலர்,** *(2017) 16* **எஸ்.சி.சி.** *680* என்ற வழக்கில் மூன்று வழக்கமான தலைப்புகளே அதாவது (i) சொத்து இழப்பு (ii) நல்லுறவு இழப்பு மற்றும் (iii) ஈமச்சடங்கு செலவுகள் ஆகியவையே உள்ளன என்றும், அதற்காக அரசமைப்பு ஆயத்தால் தீர்வளிக்கப்பட்ட தொகை முறையே ரூ.15,000/-, ரூ.40,000/- மற்றும் ரூ.15,000/- எனவும் வகுத்துரைத்துள்ளது. ஆதலால், வழக்கமான தலைப்பின் கீழ் மொத்தத் தொகை ரூ.70,000/- என்றும், மேலும், வழக்கமான தலைப்புகளின் கீழான தொகை ரூ.70,000/-க்கும் மேலாக இருக்கக்கூடாது என்பதாகும்.

16. "அன்பு மற்றும் பாசம் இழப்பு" என்ற தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட தொகை முற்றிலும் அதிகாரவரம்பற்றதாகும். மேலும் "நல்லுறவு" என்ற தலைப்பின் கீழ் மேற்கொண்டு வழங்கப்படும் தொகை ரூ.40,000/-க்கு மிகாமலிருக்கவேண்டும், 'நல்லுறவு' இழப்புக்கான தொகை ரூ.40,000/-ஐ மனைவி மட்டுமே பெறுவதற்குரியவராவார், மேலும் தீர்ப்பாயங்களும், உயர் நீதிமன்றங்களும் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் மனைவி,

குழந்தைகள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கு நல்லுறவு இழப்புக்கான தொகை குறித்து தீர்வளித்ததில் தவறிழைத்துவிட்டன எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

17. அரசமைப்பு ஆயத்தின் தீர்ப்புரைக்கு பின்னருங்கூட, இந்நீதிமன்றம் வழக்கமான தலைப்புகளான "சொத்து இழப்பு"-க்கு ரூ.15,000/- நல்லுறவு இழப்பு ரூ.40,000/- மற்றும் ஈமச் செலவுகளுக்கு ரூ.15,000/- எனத் தொகையை அனுமதித்துள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது. **பிரணய் சேதி** என்ற வழக்கின் தீர்ப்புரைக்குப் பின்னர், இந்நீதிமன்றம், வழக்கமான தலைப்புகளின் கீழ் தொகைச் செலுத்துதலை, **பிரணய் சேதி** என்ற வழக்கின் தீர்ப்புரையின்படி வரையறுத்திருந்தது. ஒவ்வொரு கோருரிமையாளருக்கும், "அன்பு மற்றும் பாசம் இழப்பு" என்பதோடு 'நல்லுறவு' இழப்பு என்ற தலைப்பின் கீழ் இழப்பீடு தீர்வளித்த உயர் நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான தீர்ப்புரை, இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்திற்கு முரணானதால் நீக்கப்படவேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

18. **ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- திருமதி ரிங்கு தேவி மற்றும் பலர்** என்ற வழக்கில் மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் ஓர் கூடுதல் வாதம் வைக்கப்பட்டுள்ளது. கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டதாவது, மோ.வி.கோ.தீ. ரூ.40,000/- என்ற வீதத்தில் நான்கு கோருரிமையாளர்களுக்கும் நல்லுறவு இழப்புக்கான தொகையை அனுமதித்ததில் தவறிழைத்துவிட்டதென்றாலும், காப்பீட்டு நிறுமத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றம் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் இழப்பீட்டை மேலும் உயர்த்தியது. கோருரிமையாளர்கள் மேல்முறையீட்டினைத் தாக்கல் செய்திராதபோது, காப்பீட்டு நிறுமத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டின்பேரில் இழப்பீட்டினை உயர்த்தியிருக்கக்கூடாது என்பதாகும். மேலும் கற்றறிந்த வழக்குரைஞர்

வாதிட்டதாவது, மேல்முறையீட்டாளரால் மேல்முறையீட்டுடன் வைப்பீடு செய்யப்பட்ட சட்டப்படியான தொகை, தில்லி உயர் நீதிமன்றத்தில் தொடங்கப்பட்ட ஆஸ்ரா சேம நிதியில் வைப்பீடு செய்யப்படவேண்டும் என உத்தரவிட்டதில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என்றும், மேல்முறையீட்டாளர் முக்கிய சட்டவினாக்களை எழுப்பியிருப்பதாலும், மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதற்குரியதாயிருப்பதாலும் இவ்வாறு உத்தரவிட்டிருக்கக்கூடாது என்பதாகும்.

19. 'நல்லுறவு இழப்புக்கான தொகை' என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொரு கோருரிமையாளர்களுக்கும் ரூ.40,000/- என்ற வீதத்திலான தீர்வளிப்பு இந்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட சட்டத்திற்கிணங்க உள்ளது என்று கோருரிமையாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர், மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞரின் வாதங்களை மறுத்துரைக்கிறார். 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ் தீர்வளிக்கப்படும் இழப்பீட்டிற்கு குறுகிய பொருள்விளக்கத்தினை அளிக்க இயலாது என்றும் பணிந்துரைக்கப்படுகிறது. 'நல்லுறவு இழப்பு' என்ற தலைப்பின் கீழ் மனைவிக்கு மட்டுமின்றி குழந்தைகளுக்கும், பெற்றோருக்கும் தொகை வழங்கியுள்ளது சரியே. கோருரிமையாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

20. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞருங்கூட இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புரைகள்மீது சார்ந்துநின்றார், அவை, வாதங்களை விரிவாகப் பரிசீலிக்கையில் குறிப்பிடப்படும்.

21. நாங்கள், தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்தைப் பரிசீலித்தப் பின்னர், பதிவாவணங்களையும் பார்வையிட்டுள்ளோம்.

22. 'இழப்பீடு' என்னும் சொற்றொடர் சேதங்களுக்கான கோருரிமையை உள்ளடக்குகின்ற ஒரு விரிவான பொருள்தரும் சொல்லாகும். இழப்பீடு என்பது ஏற்பட்ட தீங்குக்காக ஈடுசெய்வதாகும்.

23. மோட்டார் வாகனங்கள் சட்டம் 1988, பிரிவு 166-இன் கீழ் இழப்பீடு வழங்குவதற்காக கோரிக்கை செய்யும் கோருரிமையாளர் நியாயமான இழப்பீட்டிற்குரியவராவார். நியாயமான இழப்பீடு என்பது நேர்மையானதாகவும், விதிமுறை வழுவாமலும் இருக்கவேண்டும். உயிருக்கும், உடைமைக்குமான இழப்பை சரிசமமாக ஈடுசெய்ய இயலாதே ஒழிய, மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழான சட்ட வகைமுறைகள், குடும்ப உறுப்பினரின் இழப்புக்காக ஏதோவொருவகையில் இழப்பினை சரியீடு செய்யவும் மற்றும் கோருரிமையாளருக்கு நியாயமானவகையில் இழப்பீடு அளிக்கவும், கோருரிமையாளர்களின் குறையைத் தீர்க்கும்வகையில் அதனை எளிதாக்கும் கருத்துடனும், நோக்கத்துடனும் இயற்றப்பட்டிருக்கும் ஒரு சமுதாயத்திற்குரிய சட்டப் பகுதியாகும்.

24. நாங்கள், **ஜெனரல் மேனேஜர், கேரளா ஸ்டேட் ரோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், திருவனந்தபுரம் -எதிர்- சூசம்மா தாமஸ் (திருமதி) மற்றும் பலர்,** *(1994)* ***2 எஸ்.சி.சி. 176*** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைக் குறிப்பிட்டுள்ளோம். இந்நீதிமன்றம் மோட்டார் வாகனங்கள் சட்டம், 1939-இன் கீழ் இழப்பீடு குறித்த அடிப்படைக் கருத்தினைப் பரிசீலிக்கையில் பத்தி 5-இல் பின்வருமாறு வகுத்துரைத்துள்ளது:-

> "5. ..... "தவறு செய்தவர், அவரது அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் மத்தியில் தலைநிமிர்ந்துகொண்டு அவர்களது ஒப்புதலுடன்

அவர் நேர்மையான செயலை செய்துள்ளதாகக் கூறுவதற்கு அவரை அனுமதிக்கக்கூடியவாறான ஒரு சமகாலத்திய சமுதாயம் எதை நியாயமான தொகையாகக் கருதக்கூடும்" என்பதற்கு இழப்பீட்டுத் தொகையளவை தீர்மானித்தலே விடையளிக்கவேண்டும். "ஒரு சுதந்திரமான சமுதாயத்தில் உயிரையும், உடைமையையும் சட்டம், பரந்த மனப்பான்மையுடன் அளவிட்டு மதிப்பிடுவதால்" தீர்வளிக்கப்படும் தொகை கட்டாயம் அற்பமானதாக இருக்கக்கூடாது. இவை அனைத்தும், தீர்வளிக்கப்படும் தொகை, சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளப்படும் குறியளவுகளின்படி நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும் எனப் பொருள்படுகிறது."

25. மேற்சொன்ன வழக்கிலுங்கூட, இந்த நீதிமன்றம் 'நல்லுறவு இழப்பு' என்ற வழக்கமான தலைப்பின் கீழ் தொகையைத் தீர்வளித்தது.

26. இந்நீதிமன்றத்தின் **சரளா வர்மா (திருமதி) மற்றும் பலர் -எதிர்- தில்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர்,** *(2009) 6* **எஸ்.சி.சி.** *121* என்ற வழக்கின் தீர்ப்புரை அவசியம் கவனத்திற்கொள்ளவேண்டிய மற்றொரு தீர்ப்புரையாகும், அத்தீர்ப்புரையின் பத்தி *16*-இல் இந்நீதிமன்றம் "நியாயமான இழப்பீடு" என்பதை விரிவாகக் கூறுகையில் பின்வருமாறு வகுத்துரைத்துள்ளது:-

"5. ..... நியாயமான இழப்பீடு என்பது தவறின் விளைவாக ஏற்படக்கூடிய இழப்பு பணத்தினால் சரிசெய்ய இயலும் என்பதைப் பொறுத்தவரையில், அவ்வாறு செய்ய இழப்பீடு

தீர்வளிப்பது தொடர்பாக நன்கு நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடுகளைப் பொருத்தி, வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் நியாயமாகவும், நேர்மையாகவும் இருக்கின்ற நிறைவான இழப்பீடாகும். அது, வளங்கொழிக்கவோ, நன்கொடையாகவோ அல்லது இலாபத்திற்கான ஆதாரமாகவோ இருக்க திட்டமிடப்படவில்லை."

27. இந்நீதிமன்றமும் "நல்லுறவு இழப்பு" என்ற தலைப்பின் கீழ் மனைவிக்கு ஒரு தொகையைத் தீர்வளித்தது.

28. **(மேற்கண்ட) நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில், "நல்லுறவு இழப்பு" தொடர்பாக இழப்பீடு தீர்வளிக்கப்பட்டுள்ள இந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புரைகள் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, அவ்வழக்கில் அரசமைப்பு நீதியராயத்தின் தீர்ப்புரையை நாம் கருத்திற்கொள்வது அவசியமாகும். பத்தி 46-இல், பின்வருமாறு வகுத்துரைக்கப்பட்டுள்ளது:-

"46. சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச் செலவுகள் ஆகியவற்றுக்கு தொகை வழங்குவது தொடர்பாக மற்றொரு அம்சம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சந்தோஷ் தேவி என்ற வழக்கில் இரு நீதிபதிகள் ஆயம், வழக்கமான முறையைப் பின்பற்றி, நல்லுறவு இழப்புக்கு ரூ.10,000/-மும், ஈமச் செலவுகளுக்கு ரூ.10,000/-மும் மற்றும் உடலினை எடுத்துச் செல்வதற்காக ரூ.5,000/-மும் வழங்கியது. சரளா வர்மா என்ற

வழக்கில் நீதிமன்றம் சொத்து இழப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ.5,000/-ஐயும், நல்லுறவு இழப்புக்காக ரூ.10,000/-ஐயும், ஈமச் செலவுகளுக்காக ரூ.5,000/-ஐயும் வழங்கியது. ராஜேஷ் *(2013) 9* எஸ்.சி.சி. *54* என்ற வழக்கில் நீதிமன்றம் நல்லுறவு இழப்புக்காக ரூ.1,00,000/-மும், ஈமச் செலவுகளுக்காக ரூ.25,000/-மும் வழங்கியது. அது, இளவர் குழந்தைகளுக்கான கவனிப்பு மற்றும் வழிகாட்டுதல் இழப்புக்காகவும் ரூ.1,00,000/-ஐ வழங்கியது. சந்தோஷ் தேவி *(2012) 6* எஸ்.சி.சி. *421* என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு, சமூக-பொருளாதார பிரச்சினையின்பேரில் ஒரு சீரான தன்மையையும், முரணற்ற தன்மையையும் எய்தப்பெறுவதற்கு வனையப்பட்ட விதிமுறை, ஒரு சட்டக் கோட்பாட்டிலிருந்து மாறுபடுமானால், அது காலமுறைதோறும் மறுபார்வையிடப்படவேண்டும் என்ற கோட்பாட்டின்பேரில் நீதிமன்றம் இதனை உயர்த்தியது. மறுபார்வையிடுதல் என்ற கோட்பாட்டின்பேரில், வழக்கமான தலைப்புகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகையினை அது நிர்ணயித்தது. நீதிமன்றம் எதை மதிப்பிடுகிறதென்றால், பணவீக்கம் மற்றும் விலைப்பட்டியல் என்ற சங்கதியேயாகும். இது நல்லுறவு இழப்பு என்ற அடிப்படைக் கருத்தின்படியும் நடவடிக்கையெடுத்துள்ளது. இதுகுறித்து, அது கூற விழைவதையே நாங்களும் கூற எண்ணுகிறோம். நாங்கள் குறிப்பிடுவதாவது *(ராஜேஷ் வழக்கு)*:-

"17. ..... சட்டப் பாங்குரையில், "நல்லுறவு என்பது தோழமை, அக்கறை, உதவி, ஆறுதல், வழிகாட்டுதல், கூட்டுவாழ்வு, தேறுதல், பாசம் மற்றும் அவரது அல்லது அவளது துணையுடனான தாம்பத்ய உறவுகள் ஆகியவற்றுக்கு வாழ்க்கைத்துணைக்குள்ள உரிமையாகும். நமது நீதிமன்றங்களினால் பணஞ்சாரா இழப்பு என்ற தலைப்பு குறித்து சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. வாழ்க்கைத் துணையானவர் பெறுவதற்குரிய தோழமையுணர்வு, அன்பு, அக்கறை மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை இழந்துவிடுவதால் அவருக்கு உரியமுறையில் ஈடுசெய்யவேண்டும். நல்லுறவு இழப்புக்கு அடிப்படைக் கொள்கையாக உள்ள பணஞ்சாரா இழப்பு உலகின் மற்றப் பகுதிகளில், அதிலும் குறிப்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இழப்பீடு தீர்வளிப்பதற்குரிய முதன்மை தலைப்புகளில் ஒன்றாக விளங்குகிறது. ஆங்கில நீதிமன்றங்களும், தற்காலிகமாக ஊனம் ஏற்படும் காலகட்டத்தின்போதும் வாழ்க்கைத்துணை இழப்பீடு பெறுவதற்கான உரிமையை அங்கீகரித்துள்ளன. நல்லுறவு இழப்பினால், வாழ்க்கைத்துணைக்கு வருங்காலங்களில் கிடைக்கவேண்டிய பாசம், ஆறுதல், தேறுதல், தோழமை, கூட்டுவாழ்வு, உதவி, பாதுகாப்பு,

அக்கறை மற்றும் தாம்பத்ய உறவு ஆகியவற்றின் இழப்பினை ஈடுசெய்வதற்கு நீதிமன்றங்கள் முயற்சி எடுத்துள்ளன. மற்ற நாடுகளிலும் மற்றும் பிற அதிகாரவரம்புகளிலும் வழங்கப்படும் இழப்பீடு போலல்லாமல், வாரிசுரிமையர்கள் பணஞ்சார்ந்த இழப்புக்காக பிறவகையில் போதுமான அளவில் ஈடுசெய்யப்படுவதால் இந்த தலைப்பின்கீழ் பெருந்தொகையை வழங்குவது முறையாக இருக்காது. எனவே, நீதிமன்றங்கள் நல்லுறவு இழப்புக்காக குறைந்தபட்சம் ஒரு இலட்ச ரூபாயை தீர்வளித்தால்தான் அது நியாயமானதாகவும், நடுநிலைமைவாய்ந்ததாகவும் இருக்கக்கூடும் என்பது எங்களது கருத்தாகும்.""

29. பத்தி 52-இல் வழக்கமான தலைப்பான 'சொத்து இழப்பு', 'நல்லுறவு இழப்பு' மற்றும் 'ஈமச் செலவுகள்' முறையே ரூ.15,000/-, ரூ.40,000/- மற்றும் ரூ.15,000/- என்பதே நியாயமாக இருக்கவேண்டிய தொகையாகும் என அரசமைப்பு நீதியாராயம் கருத்துரைத்தது. பத்தி 52-இல் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது:-

"52. வழக்கமான தலைப்புகளைப் பொறுத்தமட்டில், ராஜேஷ் என்ற வழக்கில் சொல்லப்பட்ட கருத்துடன் ஒத்துப்போவது கடினம் என நாங்கள் அறிகிறோம். இது, ஈமச் செலவுகளுக்காக ரூ.25,000/-ம், நல்லுறவு இழப்புக்காக ரூ.1,00,000/-ம்,

இளவர் குழந்தைகளுக்கான அக்கறை மற்றும் வழிநடத்துதல் இழப்புக்காக ரூ.1,00,000/-ம் வழங்கியுள்ளது. இளவர் குழந்தைகளுக்கான அக்கறை இழப்பு என்பது தொடர்பான தலைப்பு இல்லை. ராஜேஷ் என்ற வழக்கு, சந்தோஷ் தேவி என்ற வழக்கைக் குறிப்பிட்டிருந்தபோதிலும், அதனைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. வழக்கமான மற்றும் மரபுசார்ந்த தலைப்புகள், விழுக்காட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட இயலாது என்பதை சொல்லவேண்டியதில்லை என்றாலும், அது ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோல் அல்ல. வருவாயை தீர்மானிப்பதுபோல் அல்லாமல், மேற்சொன்ன தலைப்புகள் அறுதியிடப்படவேண்டும். எந்த அறுதியீடும் ஒரு நேர்மையான ஆதாரத்தைக் கொண்டிருக்கவேண்டும். விலைப் பட்டியல், வங்கி வட்டி வீழ்ச்சியடைதல், பல செயற்களங்களில் உள்ள வீதங்களின் ஏற்றம் ஆகிய சங்கதிகளில் பிரச்சினையில்லை என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும். நீதிமன்றம் அதனைப் புறக்கணிக்க இயலாது. இக்கூறில் அனுபவமுறை விதி உள்ளது. அதாவது, அதனைத் தீர்மானிப்பதில் உச்சநிலை சிரமம் இருக்கும், மேலும் அனுபவமுறை விதியைப் பயன்படுத்தினாலன்றி, ஏதோ ஒருவிதமான கொள்கைமாறாத் தன்மை இல்லாவிடில் மிகப்பெரிய வேறுபாடு ஏற்பட்டுவிடும், அதன்விளைவாக தீர்ப்பாயங்களாலும், நீதிமன்றங்களாலும் பிறப்பிக்கப்படும்

ஆணைகள் வழிகாட்டுதலின்றி இருப்பதற்கான வாய்ப்புள்ளது. ஆதலால், நியாயமான தொகைகளை நிர்ணயிப்பது பொருத்தமானதென நாங்கள் எண்ணுகிறோம். வழக்கமான தலைப்புகளான சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு, மற்றும் ஈமச் செலவுகள் முறையே ரூ.15,000/-, ரூ.40,000/- மற்றும் ரூ.15,000/-ஆக இருக்கவேண்டும் என்பதனடிப்படையில் இது நியாயமான தொகையாகவே எங்களுக்குத் தோன்றுகிறது. மேற்சொன்ன தலைப்புகளை மறுபார்வையிடும் கோட்பாடு ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய கோட்பாடாகும். ஆனால், அந்த மறுபார்வையிடல், சங்கதியை மையமாகக்கொண்டோ அல்லது அளவினை மையமாகக்கொண்டோ இருக்கக்கூடாது. நாங்கள் அறுதிசெய்த தொகை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு விழுக்காட்டின் அடிப்படையில் உயர்த்தப்படவேண்டும் என்றும், மூன்று ஆண்டு காலத்தில் 10% என்ற வீதத்தில் உயர்த்துவது சரியாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம். அது, அத்தலைப்புகளைப் பொறுத்து ஒருமித்தத் தன்மையைக் கொண்டுவருமெனில், அவ்வாறே தீர்மானித்து நாங்கள் தீர்வு செய்கிறோம்."

30. மேலும், பத்தி 59.8-இல் வழக்கமான தலைப்புக்குரிய தொகையினை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் 10% என்ற வீதத்தில் உயர்த்தவேண்டும் என நீதிமன்றம் தீர்மானித்தது. 59.8-ஆவது பத்தியில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"59.8. சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச் செலவுகள் முறையே ரூ.15,000/-, ரூ.40,000/- மற்றும் ரூ.15,000/- என்பதனடிப்படையில் வழக்கமான தலைப்புகளின் கீழ் நியாயமான தொகை வழங்கப்படவேண்டும். மேற்சொன்ன தொகை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளில் 10% என்ற வீதத்தில் உயர்த்தப்படவேண்டும்."

31. அடுத்து குறிப்பிடத்தக்க தீர்ப்புரை **மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- நானு ராம் என்கிற சுஉற்ரு ராம் மற்றும் பலர்,** *(2018) 18* **எஸ்.சி.சி.** *130* என்பதாகும், நல்லுறவு குறித்த அடிப்படைக்கொள்கை பத்திகள் *21*, *22* மற்றும் *23*-இல் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:-

"21. (மேற்கண்ட) பிரணய் சேதி என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் ஓர் அரசமைப்பு நீதியராயம், ஒரு மரண வழக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் தீர்வளிக்கப்படவேண்டிய இழப்பீடு குறித்து விவாதித்துள்ளது. இந்த தலைப்புகளில் ஒன்றுதான் நல்லுறவு இழப்பு. சட்டப் பாங்குரையில், "நல்லுறவு" என்பது 'வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு', 'பெற்றோர்சார்ந்த நல்லுறவு' மற்றும் 'மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு' ஆகியவற்றை உள்ளடக்கிய கருத்துச்செறிவான சொல்லாகும். நல்லுறவு உரிமை என்பது மரணமுற்றவரின் குடும்பத்துக்கு ஏற்படும் இழப்பான, அவரது தோழமை, அக்கறை, உதவி, ஆறுதல், வழிகாட்டுதல், தேறுதல் மற்றும் பாசம் ஆகியவற்றை

உள்ளடக்கும். வாழ்க்கைத்துணையைப் பொறுத்தமட்டில் இறந்துபோன வாழ்க்கைத்துணையுடனான தாம்பத்ய உறவினையும் உள்ளடக்கும்.

21.1. வாழ்க்கைத்துணை நல்லுறவு என்பது பொதுவாக "தோழமை, கூட்டுவாழ்வு, ஒத்துழைப்பு, பாசம், மணவாழ்வு, உறவில் ஒருவருக்கொருவர் உறுதுணையாயிருத்தல் ஆகியவற்றின் இழப்புக்காக, உயிர்வாழ்ந்துவரும் வாழ்க்கைத்துணைக்கு இழப்பீட்டினை அனுமதிக்கும் கணவன்-மனைவி உறவுமுறை தொடர்பான உரிமைகளாக பொருள்வரையறுக்கப்பட்டுள்ளது.

21.2. பெற்றோர்சார்ந்த நல்லுறவு என்பது "பெற்றோரின் உதவி, பாதுகாப்பு, பாசம், கூட்டுவாழ்வு, ஒழுக்கம், வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் இழப்புக்காக உரியகாலத்திற்கு முன்னதாக பெற்றோர் இறந்துவிடுவதன்போில் அக்குழந்தைக்கு வழங்கப்படுகிறது.

21.3. மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு என்பது ஒரு குழந்தை தற்செயலாக இறக்கநேரிடும்போது, இழப்பீட்டுக்கு பெற்றோருக்குள்ள உரிமையாகும். ஒரு குழந்தையின் இறப்பிற்கு காரணமாகும் ஒரு விபத்து, இறந்துபோனவரின் குடும்பத்திற்கும், பெற்றோருக்கும், பேரதிர்ச்சியையும், கடுந்துயரினையும் விளைவிக்கின்றது. ஒரு பெற்றோருக்கு அவர்களது ஆயுட்காலத்தின்போது அவர்களுடைய குழந்தையை இழப்பது பெருந்துயரமாகும். தனியொரு குடும்பத்தில் குழந்தைகளின்

அன்பு, பாசம், தோழமை மற்றும் அவர்களின் பங்கு ஆகியவை அவர்களுக்கு பெரிதும் அருமையானவையாகும்.

22. நல்லுறவு என்பது உண்மையான உறவுகளின் மதிப்பையும், தகுதிநிலையையும் குறித்து மாறிவரும் நெறிமுறைகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு சிறப்பு பட்டகையாகும். ஒரு குழந்தையின் நல்லுறவு மதிப்பு, அக்குழந்தையின் இறப்பு நிகழும் சந்தர்ப்பத்தில், தீர்வளிக்கப்படும் இழப்பீட்டின் பொருளாதார மதிப்பினையே மிஞ்சிவிடுகிறது என்பதை உலகம் முழுவதும் உள்ள நவீன அதிகாரவரம்புகள் அங்கீகரித்துள்ளன. ஆகையால், ஒரு குழந்தை இறப்பதன் காரணமாக ஏற்படும் நல்லுறவு இழப்பின் கீழ் பெற்றோருக்கு இழப்பீடு தீர்வளிக்கப்பட வேண்டுமென்பதை பெரும்பாலான அதிகாரவரம்புகள் அனுமதிக்கின்றன. பெற்றோருக்கு தீர்வளிக்கப்படும் தொகை என்பது இறந்துபோன குழந்தையின் அன்பு, பாசம், அக்கறை மற்றும் தோழமை ஆகியவற்றின் இழப்புக்கு ஈடுசெய்வதாகும்.

23. மோட்டார் வாகனங்கள் சட்டம் என்பது உண்மையான கோருரிமை செய்யப்படும் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கமுடைய பயனுள்ள சட்டமாகும். பெற்றோர் தங்களது இளவர் குழந்தைகள் அல்லது திருமணமாகாத மகன் அல்லது மகளை இழந்துவிடும் நேர்வில் மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு என்ற தலைப்பின்கீழ் நல்லுறவு இழப்புக்காக பெற்றோர்கள்

தீர்வளிக்கப்படுவதற்குரியவர்களாவர். பெற்றோர்சார்ந்த நல்லுறவு இழப்புத் தொகை, இச்சட்டத்தின் கீழ் மோட்டார் வாகன விபத்துகளில் தங்களது பெற்றோர்களை இழந்துவிடும் குழந்தைகளுக்கு தீர்வளிக்கப்படுகிறது. ஒரு சில உயர் நீதிமன்றங்கள் இந்த கணக்கீட்டின்படி இழப்பீடு தீர்வளித்துள்ளன. எனினும், மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு இழப்பின்பேரில் எந்த இழப்பீடு தீர்வளிக்கப்படக்கூடும் என்பதனடிப்படையிலான கோட்பாடுகளைப் பொறுத்தவரையில் தெளிவு ஏதுமில்லை."

32. **மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் இருவர் அமர்வு நீதியராயம் இறந்துபோனவரின் தந்தைக்கும், சகோதரிக்கும் தொகை ரூ.40,000/-ஐ தீர்வளித்தது. பத்தி 24 பின்வருமாறு:-

"24. "நல்லுறவு இழப்பு"-க்காக தீர்வளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை (மேற்கண்ட) பிரணய் சேதி என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு, 'நல்லுறவு இழப்பு'-இன் கீழ் இழப்பீடு தீர்வளிப்பு கோட்பாடுகளின்படி கட்டுப்படுத்தப்படும். தற்போதைய வழக்கில், மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு இழப்புக்காக தந்தை மற்றும் சகோதரி ஒவ்வொருவருக்கும் தொகை ரூ.40,000/-ஐ தீர்வளிப்பது சரியானது என நாங்கள் கருதுகின்றோம்."

33. **யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- சதிந்தர் கவுர் என்கிற சத்விந்தர் கவுர் மற்றும் பலர்,** *(2020)* **எஸ்.சி.சி. ஆன்லைன்** *410* என்ற வழக்கில் மூவரமர் நீதியராயம், **மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் நீதியர் ஈராயத்தின் கருத்தினை மீண்டும் உறுதி செய்திருந்தது. மூவரமர் நீதியராயம் பத்தி 53-லிருந்து 65 வரையில் மூன்று வழக்கமான தலைப்புகளை விவாதித்தது. மூவரமர் நீதியராயத்தின் மூன்று வழக்கமான தலைப்புகள் குறித்த ஒட்டுமொத்த விவாதமும் பின்வருமாறு:-

> "53. (மேற்கண்ட) பிரணய் சேதி என்ற வழக்கில், மரண வழக்குகளில் மூன்று வழக்கமான தலைப்புகளான சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச் செலவுகள் ஆகியவற்றின் கீழ் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என அரசமைப்பு நீதியராயம் தீர்மானித்துள்ளது.
>
> 54. வழக்கமான மற்றும் மரபுசார்ந்த தலைப்புகள், விழுக்காட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட இயலாது, ஏனெனில் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோல் அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தது. வருவாயை தீர்மானிப்பது போலல்லாமல், மேற்சொன்ன தலைப்புகள் அறுதியிடப்பட வேண்டும். எந்த அறுதியீடும் ஒரு நேர்மையான ஆதாரத்தைக் கொண்டிருக்கவேண்டும். விலைப்பட்டியல், வங்கி வட்டி வீழ்ச்சியடைதல், வீதங்களின் ஏற்றம் போன்ற காரணிகள்

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகும் எனக் கருத்துரைக்கப்பட்டது.

வழக்கமான தலைப்புகளான சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச் செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான நியாயமான தொகை முறையே ரூ.15,000/-, ரூ.40,000/- மற்றும் ரூ.15,000/-ஆக இருக்கவேண்டும் என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த வழக்கமான தலைப்புகளின் கீழ் தீர்வளிக்கப்படும் தொகை, ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் 10% என்ற அளவில் உயர்த்தப்படவேண்டும். இது அத்தலைப்புகளைப் பொறுத்தமட்டில் ஒத்தத்தன்மையைக் கொண்டுவரும் என்பது நீதிமன்றத்தின் கருத்தாகும்.

அ) சொத்து இழப்பு - ரூ.15,000/-ஆக தீர்வளிக்கப்படும்.

ஆ) நல்லுறவு இழப்பு.

55. சட்டப் பாங்குரையில் நல்லுறவு இழப்பு என்பது வாழ்க்கைத்துணைக்கு மட்டுமே தீர்வளிக்கப்படவேண்டியதென பழங்கதையாக ஒரு குறுகிய பொருள்விளக்கம் அளிக்கப்பட்டது. அதாவது, தோழமை, அக்கறை, உதவி, ஆறுதல், வழிகாட்டுதல், கூட்டுவாழ்வு, தேறுதல், பாசம் மற்றும் அவரது அல்லது அவளது துணையுடனான காம்பத்ய உறவுகள் ஆகியவற்றுக்கு வாழ்க்கைத்துணைக்குள்ள உரிமையாகும். வாழ்க்கைத்துணையானவர் தோழமையுணர்வு, அன்பு, அக்கறை

மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை இழந்துவிடுவதால் அவருக்கு உரியமுறையில் ஈடுசெய்யவேண்டும். நல்லுறவு இழப்புக்கு அடிப்படைக் கொள்கையாக உள்ள பணஞ்சாரா இழப்பு, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பிற நாடுகளின் பல்வேறு அதிகாரவரம்புகளில் இழப்பீடு வழங்குவதற்கான முக்கியமான தலைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. தற்காலிகமாக ஊனம் ஏற்படும் காலகட்டத்தின்போதும் வாழ்க்கைத்துணை இழப்பீடு பெறுவதற்கான உரிமையை ஆங்கில நீதிமன்றங்களும் அங்கீகரித்துள்ளன.

56. மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- நானு ராம் மற்றும் பலர் என்ற வழக்கில் 'நல்லுறவு' என்பது வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு, பெற்றோர்சார்ந்த நல்லுறவு என்பதோடு மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு ஆகியவற்றை உள்ளடக்கிய கருத்துச்செறிவான சொல்லாகும் என இந்நீதிமன்றம் பொருள்விளக்கமளித்துள்ளது. நல்லுறவு உரிமை என்பது மரணமுற்றவரின் குடும்பத்துக்கு ஏற்படும் இழப்பான, அவரது தோழமை, அக்கறை, உதவி, ஆறுதல், வழிகாட்டுதல், தேறுதல் மற்றும் பாசம் ஆகியவற்றை உள்ளடக்கும். வாழ்க்கைத்துணையைப் பொறுத்தமட்டில், இறந்துபோன வாழ்க்கைத்துணையுடனான தாம்பத்ய உறவினையும் உள்ளடக்கும்.

57. <u>பெற்றோர்சார்ந்த நல்லுறவு</u> இழப்புத் தொகை என்பது பெற்றோரின் உதவி, பாதுகாப்பு, பாசம், கூட்டுவாழ்வு, ஒழுக்கம், வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் இழப்புக்காக உரியகாலத்திற்கு முன்னதாக பெற்றோர் இறந்துவிடுவதன்பேரில் அக்குழந்தைக்கு வழங்கப்படுகிறது.

58. <u>மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு</u> என்பது ஒரு குழந்தை தற்செயலாக இறக்கநேரிடும்போது, வழக்கில் இழப்பீட்டுக்கு பெற்றோருக்குள்ள உரிமையாகும். ஒரு குழந்தையின் இறப்பிற்கு காரணமாகும் ஒரு விபத்து, இறந்துபோனவரின் குடும்பத்திற்கும், பெற்றோருக்கும், பேரதிர்ச்சியையும், கடுந்துயரினையும் விளைவிக்கின்றது. பெற்றோருக்கு அவர்களது ஆயுட்காலத்தின்போது அவர்களுடைய குழந்தையை இழப்பது பெருந்துயரமாகும். தனியொரு குடும்பத்தில் குழந்தைகளின் அன்பு, பாசம், தோழமை மற்றும் அவர்களின் பங்கு ஆகியவை அவர்களுக்கு பெரிதும் அருமையானவையாகும்.

59. ஒரு குழந்தையின் நல்லுறவு மதிப்பு, அக்குழந்தையின் இறப்பு நிகழும் சந்தர்ப்பத்தில் தீர்வளிக்கப்படும் இழப்பீட்டின் பொருளாதார மதிப்பினையே மிஞ்சிவிடுகிறது என்பதை உலகம் முழுவதும் உள்ள நவீன அதிகாரவரம்புகள் அங்கீகரித்துள்ளன. ஒரு குழந்தை இறப்பதன் காரணமாக ஏற்படும் நல்லுறவு இழப்பின் கீழ், பெற்றோருக்கு இழப்பீடு தீர்வளிக்கப்படவேண்டும்

என்பதை பெரும்பாலான அதிகாரவரம்புகள் அனுமதிக்கின்றன. பெற்றோருக்கு தீர்வளிக்கப்படும் தொகை என்பது இறந்துபோன குழந்தையின் அன்பு, பாசம், அக்கறை மற்றும் தோழமை ஆகியவற்றின் இழப்புக்கு ஈடுசெய்வதாகும்.

60. மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 என்பது உண்மையான கோருரிமை செய்யப்படும் வழக்குகளில், பாதிக்கப்பட்டவர்-களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன் வனையப்பட்ட ஒரு பயனுள்ள சட்டமாகும். பெற்றோர் தங்களது இளவர் குழந்தைகள் அல்லது திருமணமாகாத மகன் அல்லது மகளை இழந்துவிடும் நேர்வில் மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு என்ற தலைப்பின் கீழ் நல்லுறவு இழப்புக்காக பெற்றோர்கள் தீர்வளிக்கப்படுவதற்குரியவர்களாவர்.

61. பெற்றோர்சார்ந்த நல்லுறவு இழப்புத் தொகை மோட்டார் வாகன விபத்துகளில் தங்களது பெற்றோர்களின் அக்கறை மற்றும் பாதுகாப்பினை இழந்துவிடும் குழந்தைகளுக்கு தீர்வளிக்கப் படுகிறது.

62. நல்லுறவு இழப்புக்காக தீர்வளிக்கப்படவேண்டிய தொகை (மேற்கண்ட) பிரணய் சேதி என்ற வழக்கில் நிர்ணயித்தப்படியானதாக இருக்கும்.

63. இக்கட்டத்தில், நல்லுறவு, அன்பு மற்றும் பாசம் இழப்புக்காக தொகை வழங்குவது தொடர்பாக, அது ஒரே சீரான

தன்மையுடன் வழங்குவது அவசியமென்று நாங்கள் கருதுகிறோம். பல்வேறு தீர்ப்பாயங்களும், உயர் நீதிமன்றங்களும் அன்பு மற்றும் பாசம் இழப்பு, நல்லுறவு இழப்பு என்ற இவ்விரண்டுக்காகவும் இழப்பீடு தீர்வளித்து வருகின்றன. (மேற்கண்ட) பிரணய் சேதி என்ற வழக்கில் அரசமைப்பு நீதியராயம் மூன்று வழக்கமான தலைப்புகளான சொத்து இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச் செலவுகள் ஆகியவற்றின் கீழ் மட்டுமே இழப்பீடு தீர்வளிக்க இயலும் என்பதை அங்கீகரித்துள்ளது.

64. (மேற்கண்ட) மேக்மா ஜெனரல் என்ற வழக்கில் வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு, பெற்றோர்சார்ந்த நல்லுறவு என்பதோடு மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு உள்ளிட்ட நல்லுறவுக்கு இந்நீதிமன்றம் விரிவான பொருள்விளக்கம் அளித்துள்ளது. நல்லுறவு இழப்பு என்பதற்குள்ளாகவே அன்பு மற்றும் பாசம் இழப்பு அடங்கிவிடுகிறது.

65. தீர்ப்பாயங்களும், உயர் நீதிமன்றங்களும் சட்டப்படியாக உள்ள வழக்கமான தலைப்பான நல்லுறவு இழப்புக்கான இழப்பீடு தீர்வளிக்க பணிக்கப்படுகின்றன. அன்பு மற்றும் பாசம் இழப்பை ஒரு தனிப்பட்ட தலைப்பாகக்கொண்டு இழப்பீடு வழங்குவதில் நியாயமில்லை.

இ) ஈமச் செலவினங்கள் - ரூ.15,000/- தீர்வளிக்கப்படவேண்டும்."

34. மேற்சொன்ன வழக்கில் மூவரமர் நீதியராயம், வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு, பெற்றோர்சார்ந்த நல்லுறவு என்பதோடு மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு ஆகியவற்றை உள்ளடக்கக்கூடிய 'நல்லுறவு' எனும் சொல்லுக்கு அளிக்கப்பட்ட விரிவான பொருள்விளக்கத்தை அங்கீகரித்துள்ளது. மேலும், மூவரமர் நீதியராயம் 'நல்லுறவு இழப்பு' என்பதற்குள் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' அடங்கியிருந்தாலும் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு'-ஐ ஒரு தனிப்பட்ட தலைப்பாகக்கொண்டு இழப்பீடு அளிப்பதில் நியாயமில்லை.

35. **பிரணய் சேதி** என்ற வழக்கில் அரசமைப்பு நீதியராயமும், வழக்கமான தலைப்பின் கீழ் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' தொடர்பாக இழப்பீடு எதனையும் உள்ளடக்கவில்லை என்பது ***(மேற்கண்ட)* யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் மூவரமர் நீதியராயத்தாலும் தற்போது வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் இழப்பீடு அளிப்பதற்கு இயலாது என்று தற்போது அதிகாரப்பூர்வமாக நன்கு அறுதியிடப்பட்டுள்ளது.

36. 'நல்லுறவு' என்னும் சொல், *10*-ஆம் பதிப்பு, பிளாக்கின் சட்டச்சொல் அகராதியில் பொருள்வரையறுக்கப்பட்டுள்ளது. பிளாக்கின் சட்டச்சொல் அகராதியும் மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு, பெற்றோர்சார்ந்த நல்லுறவு மற்றும் வாழ்க்கைத்துணை சார்ந்த நல்லுறவு ஆகியவற்றை ஒரேசமயத்தில் பின்வரும் முறையில் குறிப்பிட்டிருக்கிறது:-

"**நல்லுறவு** *1.* ஒரு நபர், குறிப்பாக வாழ்க்கைத்துணை ஒருவர், மற்றொரு துணையிடமிருந்து தோழமை, ஒத்துழைப்பு, பாசம், உதவி,

நிதியாதரவு மற்றும் (வாழ்க்கைத்துணைகளுக்கு இடையேயான) தாம்பத்ய உறவு உள்ளிட்ட பலன்களைப் பெறுபவர் நல்லுறவு இழப்புக்கான உரிமை கோருவதற்குரியவராவார்.

- **மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு** ஒரு பெற்றோருக்கு ஒரு குழந்தையிடமிருந்து கிடைக்கக்கூடிய இணக்கம், பாசம் மற்றும் தோழமைசார்ந்த உறவு.
- **பெற்றோர்சார்ந்த நல்லுறவு** ஒரு குழந்தைக்கு ஒரு பெற்றோரிடமிருந்து கிடைக்கக்கூடிய இணக்கம், பாசம் மற்றும் தோழமைசார்ந்த உறவு.
- **வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு** ஒரு வாழ்க்கைத்துணைக்கு மற்றொரு வாழ்க்கைத்துணையிடமிருந்து கிடைக்கக்கூடிய இணக்கம், பாசம் மற்றும் தோழமைசார்ந்த உறவு."

37. **(மேற்கண்ட) மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்குடன் **(மேற்கண்ட) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் நல்லுறவு என்பது வாழ்க்கைத்துணை நல்லுறவுக்கு மட்டும் வரையறுக்கப்படாது மகவுரிமைச்சார்ந்த நல்லுறவோடு, பெற்றோர்சார்ந்த நல்லுறவையும் உள்ளடக்குகிறது என்று மூவரமர் நீதியராயம் வகுத்துரைத்துள்ளது. **(மேற்கண்ட) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கின் பத்தி 87-இல், மூன்று கோருரிமையாளர்களுக்கும் இவ்வாறாக நல்லுறவு இழப்புக்கான தொகை தீர்வளிக்கப்பட்டது. பத்தி 87 கீழ்வருமாறு குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது:-

"87. வழக்கமான தலைப்புகள் என்பதைப் பொறுத்தவரையில் இறந்துபோன சத்பால் சிங், அவரைச் சார்ந்து வாழ்ந்துவந்தவர்களான விதவை மனைவியையும், மூன்று குழந்தைகளையும் விட்டு இறந்துவிட்டார். (மேற்கண்ட) பிரணய் சேதி மற்றும் (மேற்கண்ட) மேக்மா ஜெனரல் என்ற வழக்குகளின் தீர்ப்புரைகளின் அடிப்படையில் வழக்கமான தலைப்புகளின் கீழ் பின்வரும் தொகைகள் தீர்வளிக்கப் பட்டுள்ளன:-

i) சொத்து இழப்பு : ரூ. 15,000/-

ii) நல்லுறவு இழப்பு :

(அ) வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பு : ரூ.40,000/-

(ஆ) பெற்றோரின் நல்லுறவு இழப்பு : 40,000 x 3 = ரூ.1,20,000/-

iii) ஈமச் செலவினங்கள் : ரூ.15,000/-"

38. **பிரணய் சேதி** என்ற வழக்கில் வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு இழப்புத் தொகை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் **பிரணய் சேதி** வழக்கின் தீர்ப்புரையில் வேறெந்த நல்லுறவு இழப்புத் தொகை குறித்தும் குறிப்பிடப்படவில்லை, எனவே பெற்றோர்சார்ந்த நல்லுறவு இழப்புத் தொகையையும், மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு இழப்புத் தொகையையும் அனுமதித்ததற்கான நியாயமான காரணவிளக்கம் அளிக்கப்படவில்லை என மேல்முறையீட்டாளருக்கான

கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். **பிரணய் சேதி** என்ற வழக்கில் அரசமைப்பு நீதியராயம் 'நல்லுறவு இழப்பு'-க்கு தொகை ரூ.40,000/-ஐ குறிப்பிட்டுள்ளதே தவிர, அரசமைப்பு நீதியராயம் வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு இழப்புக்காக ரூ.40,000/-மட்டுமே செலுத்தக்கூடியதா? என்பது குறித்த பிரச்சினையை விவாதித்திருக்கவில்லை. நல்லுறவு இழப்புக்கான தொகை மனைவிக்கு மட்டுமே செலுத்தக்கூடியது என்ற கருத்தினை **பிரணய் சேதி** என்ற வழக்கின் தீர்ப்புரை வகுத்துரைப்பதாக பொருள்கொள்ள இயலாது.

39. **(மேற்கண்ட) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு இழப்புத் தொகை தவிர பெற்றோர்சார்ந்த மற்றும் மகவுரிமைச்சார்ந்த நல்லுறவு இழப்புக்கான தொகையும் செலுத்தக்கூடியதென மூவரமர் நீதியராயம் ஐயத்திற்கிடமின்றி வகுத்துரைத்துள்ளது. மூவரமர் நீதியராயத்தின் மேற்சொன்ன தீர்ப்புரை எங்களையும் கட்டுப்படுத்துவதாகவே நாங்கள் எண்ணுகிறோம். ஆதலால், ஒவ்வொரு கோருரிமையாளர்களுக்கும் தீர்வளிக்கப்பட்ட நல்லுறவு இழப்புத் தொகை நிலைநிறுத்தத்தக்கதல்ல என்னும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்தை நாங்கள் ஏற்க இயலாது.

40. ஆதலால், ஒவ்வொரு கோருரிமையாளர்களுக்கும் நல்லுறவு இழப்புத் தொகையை, சட்டப்படி தீர்வு செய்த உயர் நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான தீர்ப்புரைகள், இந்த மேல்முறையீட்டில் தலையிடுவதற்கு கோரவில்லை என நாங்கள் அறிகிறோம். எனினும், 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' எனும் தனிப்பட்ட தலைப்பின் கீழ் இழப்பீடு தீர்வளிப்பதற்கான நியாயமான காரணவிளக்கம் ஏதுமில்லை என்ற மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களை நாங்கள் ஏற்கிறோம். 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பின் கீழ் இழப்பீடு

தீர்வளிப்பதைப் பொறுத்தவரையில் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதாகும்.

41. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயத்தின் தீர்ப்புரையான **சங்கீதா ஆர்யா மற்றும் பலர் -எதிர்- ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்,** *(2020)* **எஸ்.சி.சி. ஆன்லைன்** *513*-ஐயும் நாங்கள் கவனித்தோம். இந்நீதிமன்றம் 'நல்லுறவு இழப்பு'-க்கான தொகை ரூ.*40,000*/- மட்டுமே வழங்கியிருப்பது, குழந்தைகளுக்கு நல்லுறவு இழப்புத் தொகை வழங்கப்பட இயலாது என்பதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளதென மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார். மேற்சொன்ன வழக்கில், மோட்டார் விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயம், நல்லுறவு இழப்புக்காக விதவை மனைவிக்கு ரூ.*20,000*/-மும், 'அன்பு மற்றும் பாசம் இழப்பு'-க்காக இளவர் மகளுக்கு ரூ.*10,000*/-மும் தீர்வளித்துள்ளது. உயர் நீதிமன்றம் நல்லுறவு இழப்புத் தொகையினை ரூ.*20,000*/-லிருந்து ரூ.*10,000*/-ஆக குறைத்துள்ளது. தீர்ப்புரையின் பத்தி *16* பின்வருமாறு:-

> *"16.* விதவை மனைவிக்கு செலுத்தப்படவேண்டிய நல்லுறவு இழப்புத் தொகை உயர் நீதிமன்றத்தால் *(*மோ.வி.கோ.தீ. தீர்வளித்தபடி*)* ரூ.*20,000*/-லிருந்து ரூ.*10,000*/-ஆக குறைக்கப்பட்டது. இளவர் மகள்களுக்கு அன்பு மற்றும் பாசம் இழப்புக்காக தீர்வளிக்கப்பட்ட தொகை ரூ.*10,000*/-லிருந்து ரூ.*5,000*/-ஆக குறைக்கப்பட்டது. எனினும், மோ.வி.கோ. தீர்ப்பாயத்தால்

ஈமச் செலவினங்கள்பொருட்டு தீர்வளிக்கப்பட்ட தொகை ரூ.5,000/- நிலைநிறுத்தப்பட்டது."

42. மேற்சொன்ன வழக்கில் இந்நீதிமன்றம் இறந்தவரின் வருவாய் தொடர்பான பரிசீலனைக்குட்படுத்திக்கொண்டது, மேலும், நல்லுறவு இழப்புக்கான தொகை மற்ற சட்டப்படியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று எந்தவித பரிசீலனையும் செய்யப்படவில்லை. எவ்வித கோருரிமையும் எழுப்பப்படவில்லை. மற்ற சட்டப்படியான வாரிசுகளுக்கும் நல்லுறவு இழப்புத் தொகை செலுத்துவதற்கான கோருரிமை இல்லையென்றாலும், இந்நீதிமன்றம் நல்லுறவு இழப்புக்காக தொகை ரூ.40,000/-ஐ தீர்வளித்தது. நல்லுறவு இழப்புக்கான தொகை, வாழ்க்கைத்துணைசார்ந்த நல்லுறவு இழப்புக்கான தொகையாகவே செலுத்தக்கூடியது என்றும், அந்த நல்லுறவு இழப்புக்கான தொகை குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் செலுத்தக்கூடியதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என அத்தகைய அகவுரை எதுவும் மேற்சொன்ன தீர்ப்புரையிலிருந்து அறிவதற்கில்லை.

43. நாங்கள் ஏற்கெனவே மேலே குறிப்பிட்டுள்ள தீர்ப்புரையான மேற்படி மூவரமர் நீதியராயம், **சங்கீதா ஆர்யா** என்ற வழக்கின் தீர்ப்புரையில் வாழ்க்கைத்துணைசார்ந்த மற்றும் பெற்றோர்சார்ந்த என்ற இவ்விரண்டின் நல்லுறவு இழப்புக்கான தொகை செலுத்தத்தக்கதே என்று திட்டவட்டமாக வகுத்துரைத்த பின்னர் உடனடியாக **யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் லிமிடெட்** என்ற வழக்கில் பகரப்பட்ட இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைக் குறிப்பிடுவது தக்கதாகும்.

44. நாங்கள், உரிமையியல் மேல்முறையீடு எண் 2885/2020-இல் 12.6.2020 அன்று தீர்வு செய்யப்பட்ட **எம்.உறச். உமா மகேஸ்வரி மற்றும் பலர் -எதிர்- யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின்

மூவரமர் நீதியராயத்தின் மற்றுமொரு தீர்ப்புரையையும் கவனித்திற்கொண்டோம். மேற்சொன்ன வழக்கில், தீர்ப்பாயம், மனைவிக்கு நல்லுறவு இழப்பு தொடர்பாக தொகை ரூபாய் ஒரு இலட்சமும், அன்பு மற்றும் பாசம் இழப்பு தொடர்பாக அனைத்து மேல்முறையீட்டாளர்களுக்கும் ரூபாய் மூன்று இலட்சமும் தீர்வளித்தது. உயர் நீதிமன்றம் மேற்சொன்ன வழக்கில் காப்பீட்டு நிறுமத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் இழப்பீட்டுத் தொகையைக் குறைத்தது. தீர்ப்பாயம் 'அன்பு மற்றும் பாசம் இழப்பு' என்ற தலைப்பு தொடர்பாக முதல் மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் ஒரு இலட்சம் தீர்வளிக்கையில், மனைவிக்கு நல்லுறவு இழப்பு தொடர்பாக ரூபாய் ஒரு இலட்சம் தொகை தீர்வளித்து தவறிழைத்துவிட்டது என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. கோருரிமையாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினை அனுமதித்து, இந்நீதிமன்றம் மோ.வி.கோ.தீ.-இன் ஆணையை நிலைநிறுத்தியது.

45. மேற்படி தீர்ப்புரை மூவரமர் நீதியராயத்தால் வழங்கப்பட்டிருந்தாலும், நல்லுறவு இழப்புக்காக ரூபாய் ஒரு இலட்சமும், அன்பு மற்றும் பாசம் இழப்புக்காக ரூபாய் மூன்று இலட்சமும் இழப்பீடு தீர்வளித்தது குறித்து எதுவும் எதிர்த்துரைக்கப்படவில்லை. இந்த மேல்முறையீடு கோருரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்டதேதவிர காப்பீட்டு நிறுமத்தால் அல்ல. இந்நீதிமன்றம் "அன்பு மற்றும் பாசம் இழப்பு" என்ற தலைப்பின் கீழ் தீர்வளிக்கப்பட்ட தொகையின் சரியீடு குறித்து நீதிமன்றம் தீர்ப்பு பகரவில்லை.

46. நாங்கள், ***(சி.அ.ம. (உ) எண் 8250/2020-இல் எழுகின்ற) உரிமையியல் மேல்முறையீடு எண் ...../2020-இல் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- திருமதி ரிங்கு தேவி மற்றும் பலர்*** என்ற வழக்கில் முன்வைக்கப்பட்ட கூடுதல் வாதங்களையும் கவனத்திற்கொண்டோம். மேற்குறிப்பிடப்பட்டவாறு, கோருரிமையாளர்கள்

ஒவ்வொருவருக்கும் "அன்பு மற்றும் பாசம் இழப்பு"-க்காக ரூ.50,000/- வீதத்தில் இழப்பீடு தீர்வளித்த உயர் நீதிமன்றத்தின் உத்தரவு நியாயமற்றது என நாங்கள் கருதுவதால், இம்மேல்முறையீட்டில் அதனை நீக்கறவு செய்கிறோம். மேலும், உயர் நீதிமன்றம் பத்தி 9-இல் சட்டப்படியான தொகை, அதனுடன் சேர்ந்தடைந்த வட்டியுடன் ஆஸ்ரா நிதியில் சேர்ப்பிக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டதையும் நாங்கள் மேற்படி மேல்முறையீட்டில் நீக்கறவு செய்கிறோம்.

47. முடிவாக, அனைத்து மேல்முறையீடுகளும் பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன. "அன்பு மற்றும் பாசம் இழப்பு" என்ற வழக்கமான தலைப்பின் கீழ் தீர்வளித்த இழப்பீட்டினை நீக்கறவு செய்கிறோம். மோட்டார் விபத்து கோருரிமைகள் தீர்ப்பாயங்கள் செலுத்தக்கூடிய தொகையை மறுகணக்கீடு செய்து, சட்டப்படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

48. அதற்கிணங்க அனைத்து மேல்முறையீடுகளும் பகுதியாக அனுமதிக்கப் படுகின்றன. செலவுத்தொகை இல்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. அஷோக் பூஷன்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி

புது தில்லி,
07.09.2020.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."